"Under Section 173 BNSS"

# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

~~(Under Section 154 Cr.P.C.)~~

~~(கு.ந.வி.தொ.பிரிவு 154-இன் கீழ்)~~

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8109476

1. District மாவட்டம் : Ranipet PS: காவல்நிலையம் V & AC Year: ஆண்டு 2025 FIR No.: மு.த.அ. எண் 1/2025 Date: நாள் 3/4/25

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Sections பிரிவுகள்: 7 of PC Act 1988 as
(ii) Act சட்டம்: Act 1988 as amended in Sections பிரிவுகள்: amended in PC (Amend
(iii) Act சட்டம்: PC (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: ment) Act 2018
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 08/3/25 Date to : நாள் வரை 17 00 hrs
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 2/4/25 Time to : நேரம் வரை 18.30 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 3.4.25 Time : நேரம் 08.45 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol. I Time : நேரம் 03.04.25 at 08.45 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Type written.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் O/o the Assistant Divisional Engineer TANGEDCO Arakkonam, North East, 70 kms.
Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி O/o the Asst. Divisional Engineer, (O&M) TANGEDCO
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் G. Saravanan (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Govindaswamy
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
(f) Occupation : தொழில் Business (g) Address : முகவரி No 21, 5th street, Durai Samy Nagar, Ammanoor, Arakkonam, Ranipet District

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
(1) Tmt. Punitha, Assistant Divisional Engineer, (O&M) TANGEDCO, Arakkonam Town.
(2) Tmt. Monika, Commercial Inspector, O/o Asst. Divisional Engineer (O&M) TANGEDCO, Arakkonam Town

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

- No Delay -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Seperate Sheets attached

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ......................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையிட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

3/04/25 S. Vijayalakshmi 3/4/25

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
3/4/25 @ 12.30hrs

Name: பெயர் S. VIJAYALAKSHMI
Rank: நிலை INSPECTOR OF POLICE VACB, Ramnad

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

<u>பணிந்து அனுப்பப்படுகிறது:</u> இராணிப்பேட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் S.விஜயலட்சுமி ஆகிய நான் 03.04.2025 ஆம் தேதி 08.45 மணிக்கு அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது, இராணிப்பேட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணை காவல் கண்காணிப்பாளர் திரு.V.கணேசன் அவர்கள் எனக்கு மேலொப்பம் செய்து கொடுத்த திரு. G.சரவணன், த/பெ கோவிந்தசுவாமி, எண்.41, 5வது தெரு, துரைசாமி நகர், அம்மனூர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம் என்பவரின் புகார் மனுவை பெற்று பார்க்க, அனுப்புநர் G.சரவணன், த/பெ கோவிந்தசுவாமி, எண்.41, 5வது தெரு, துரைசாமி நகர், அம்மனூர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம். பெறுநர் துணை காவல் கண்காணிப்பாளர், லஞ்ச ஒழிப்புத்துறை, இராணிப்பேட்டை. அய்யா, நான் ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் தாலுக்கா அம்மனூர் துரைசாமி நகரில் என் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் DME முடித்துள்ளேன். நான் கடந்த ஐந்து வருடங்களாக கட்டிட ஒப்பந்தப்பணிகளை செய்து வருகிறேன். என்னுடைய மனைவி ஏஞ்சலின் பிரியதர்ஷிணி திருத்தணி கெங்குசாமி நாயுடு மெட்ரிக்குலேஷன் ஹையர் செகண்டரி ஸ்கூலில் பிரின்ஸிபாலாக உள்ளார். எங்களுக்கு ஒரு மகனும், ஒரு மகளும் உள்ளனர். நான் தற்சமயம் எங்கள் சொந்தக்காரர் ஜேக்கப் என்பருக்கு சொந்தமான அரக்கோணம் கிருஷ்ணாம்பேட்டை ஒச்சேரி ரோட்டில் கவர்மென்ட் ஹையர் செகன்டரி ஸ்கூலுக்கு எதிரில் உள்ள வீட்டை மாதம் ரூ.2,000/-தரை வாடகைக்கு எடுத்து அதன் முன்புறம் மெட்டல் ஷீட்டில் ஷெட் ரெடி பண்ணி ஓட்டல் குருமா என்கிற பெயரில் ஓட்டலை கடந்த பத்து நாட்களாக நடத்தி வருகிறேன். அந்த வீட்டின் EB கனெக்ஷன் Domestic -ல் ஜேக்கப் என்பவர் பெயரில்தான் இருக்கிறது. அதை நான் Commercial Tarif ஆக மாற்றுவதற்கு ஓட்டலை ஆரம்பிப்பதற்கு முன்பாக 03-03-2025 தேதியன்று அரக்கோணம் EB ஆபிசுக்கு போய் போர்மென் பல்கீஸ் பேகம் என்பவரை பார்த்து ஜேக்கப் பெயரிலேயே கமர்ஷியல் கனக்ஷனாக மாற்றுவது சம்மந்தமாக பேசினேன். அப்போது அவர் இதற்கு நீங்கள் ADE மேடம் அவர்களைத்தான் பார்க்க வேண்டும் என்றும், நான் மேடத்தை உங்களுடைய ஓட்டலுக்கு கூட்டிட்டு வரேன், அப்போது

அவரிடம் பேசிக்கொள்ளலாம் என்று சொல்லி அனுப்பிவிட்டார்கள். கடந்த 07-03-2025 தேதியன்று ஓட்டலை தொடங்க பூஜை செய்தேன். பின்னர், கடந்த 08-03-2025 தேதி மாலை சுமார் 5 மணியளவில் நான் ஓட்டலில் இருந்தபோது போர்மென் பல்கீஸ் பேகம் என்பவருடன் ADE புனிதாவும், கமர்ஷியல் இன்ஸ்பெக்டர் மோனிகா என்பவரும் வந்தனர். அப்போது ADE புனிதா அவர்கள் வந்து ஓட்டலை பார்த்துவிட்டு, டொமஸ்டிக் கனெக்ஷனில் ஓட்டலை நடத்துவது தப்பு, அதற்காக ஒரு லட்சம் வரை பைன் போட வேண்டும் என்று சொன்னபோது, அவர்களிடம் மேடம் நான் இந்த ஷெட்டை முதன் முதலில் என்னுடைய காரை நிறுத்துவதற்காகத்தான் போட்டேன், அதன் பின்னர்தான் ஓட்டலை நடத்தலாம் என்று நினைத்து டொமஸ்டிக் டேரிப்பை கமர்ஷியல் டேரிப்பாக மாற்றிவிட்டு ஓட்டலை நடத்தலாம் என்றுதான் உங்களை வந்து பார்த்தேன் என்று சொன்னேன். அதற்கு ADE புனிதா அவர்கள் என்னிடம் பல்கீஸ் பேகம் சொல்வதை போல் கேளுங்கள், உங்களுக்குண்டானதை நான் செய்து கொடுக்கிறேன் என்று சொல்லிவிட்டு மூன்று பேரும் போய்விட்டார்கள். அதன் பின்னர், நானும் என்னுடைய ஓட்டல் நடத்துவதை தற்காலிகமாக நிறுத்தியிருந்தேன். அதன் பின்னர், இரண்டு நாட்கள் கழித்து போர்மென் பல்கீஸ் பேகம் அவர்கள் நான் ஓட்டலில் இருந்தபோது என்னிடம் வந்து டேரிப்பை மாற்றத்தேவையான டாகுமெண்ட்டுகள், வி.ஏ.ஓ.வின் என்.ஓ.சி., வீட்டிற்குண்டான வரி ரசீது நகல், EB கார்டு ஜெராக்ஸ், வீட்டு உரிமையாளரான ஜேக்கப்பின் ஆதார் கார்டு நகல் ஆகியவற்றை கொடுக்க வேண்டும் என்றும், ஐம்பதாயிரம் ரூபாய் டெபாசிட் செலவாகுமென ADE சொல்ல சொன்னதாக சொன்னார். அதற்கு நான் அவரிடம் கமர்ஷியல் கனக்ஷனாக மாற்றுவதற்காக ஐம்பதாயிரம் ரூபாய் கொடுக்க வேண்டுமா என்று கேட்டதற்கு, அவர் எல்லாவற்றிற்கும் பில் வந்து விடும் என்று சொன்னார். நானும் அவரிடம் அவர் கேட்ட டாகுமெண்ட்டுகள் நகல்களை அவரிடம் கொடுத்துவிட்டு, நான் பணத்தை ரெடி பண்ணிவிட்டு சொல்கிறேன் என்று சொன்ன பிறகு அவர் போய்விட்டார். பின்னர், கடந்த 18-03-2025 தேதி சாயந்திரம் 6.30 மணிக்கு போர்மென் பல்கீஸ் பேகம் அவர்கள் எனக்கு போன் செய்து ADE காஞ்சிபுரம் போறாங்க, உடனே வாங்க

என்றார். நானும் அவரிடம் ஆபிஸில் வந்து கட்டுகிறேன் என்று சொன்னபோது அவர் மேடம் என்னுடைய வீட்டிற்குதான் வருகிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள், நீங்கள் என்னுடைய வீட்டிற்கு வந்து பணத்தை கொடுங்கள், அப்ளிகேஷன் அப்ளை பண்ணுவதிலிருந்து எல்லாவற்றையும் அவரே பார்த்துக்கொள்கிறேன் என்று சொல்லியிருக்கிறார் என்று சொன்னார். எனக்கு அதிகம் வேலை இருந்ததால் அடிக்கடி EB ஆபிஸிற்கு என்னால் போக முடியாததால் நானும் வேறு வழியில்லாமல் அதற்கு ஒப்புக்கொண்டேன். பின்னர், நான் பல்கீஸ் பேகம் வீட்டின் அட்ரஸை விசாரித்து, உடனே அவருடைய வீட்டிற்கு போய் பார்த்தபோது, ஏற்கனவே ADE புனிதா அவர்கள் என்னுடைய ஒட்டலுக்கு வந்தபோது உடன் வந்த கமர்ஷியல் இன்ஸ்பெக்டர் மோனிகா அவர்களும் இருந்தார். அவர்களிடம் நான் கொண்டு போன பணம் ஐம்பதாயிரம் ரூபாயை கொடுத்துவிட்டு, மேடம்கிட்ட சொல்லி சீக்கிரம் முடிங்க என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். மறுநாள் 19-03-2025 தேதி சாயந்திரம் 4 மணியளவில் கமர்ஷியல் இன்ஸ்பெக்டர் மோனிகா அவர்கள் எனக்கு போன் செய்து, உங்களுடைய அப்ளிகேஷன் அப்ளை பண்ணிட்டிருக்கிறோம், உங்களுடைய போனிற்கு ஓ.டி.பி. மெஸேஜ் வரும் அந்த நெம்பரை சொல்லுங்க என்று சொன்னார். மெஸேஜூம் வந்தது நானும் ஓ.டி.பி. நெம்பரை சொன்னேன். பின்னர், எனக்கு அப்ளிகேஷன் நெம்பர் 200082840325153 எனவும், ரிஜிஸ்ட்ரேஷனுக்குண்டான பணம் ரூ.215/-ஐ செலுத்த சொல்லியும் மெஸேஜ் வந்தது. பின்னர், 20-03-2025 தேதி மதியம் மூன்று மணியளவில் என்னை ரூ.160/- பணம் கட்ட சொல்லி மெஸெஜ் வந்தது. அன்றைய தினம் சாயந்திரம் ஆபிஸிலில் இருந்து வீட்டிற்கு போய்க்கொண்டிருந்தவரை நிறுத்தி, அவர்களிடம் நான் மேடம், இருபத்திரண்டாயிரம் டெபாஸிட்டுன்னு சொன்னீங்க, ரூ.160/- மெஸேஜ் வந்திருக்கு என்று கேட்டதற்கு, அவர் என்னிடம் கோபமாக நாங்க உங்களுக்காக எவ்வளவு ரிஸ்க் எடுத்திட்டிருக்கிறோம், மேடம் உங்களுக்காக எவ்வளவு கஷ்டப்பட்டு இதையெல்லாம் பண்ணிட்டிருக்காங்க, நீங்க சீரியஸ்னெஸ் தெரியாமல் இதையெல்லாம் கேட்டுட்டிருக்கீங்க என்று சொல்லிவிட்டு போய்விட்டார். மறுநாள் பல்கீஸ் பேகம் அவர்கள் எனக்கு போன் செய்து உங்களுடைய வேலை பாதி முடிந்துவிட்டது, மீதி வேலையை முடிப்பதற்கு இன்னும் ஐம்பதாயிரம் ரூபாயை கொடுக்க வேண்டும் என்று சொன்னார். நானும் அவரிடம்

எனக்கு வேறு வழியில்லாததால் சரி தருகிறேன் மேடம், பணத்தை ரெடி பண்ணிவிட்டு சொல்கிறேன் என்று சொன்னேன். பின்னர், மோனிகா அவர்கள் அடிக்கடி ஸ்குவாடு வருவதாகவும், போன் மூலமாகவும், ஓட்டலுக்கு நேரிலும் வந்து பணம் கேட்டார். கடந்த 01-04-2025 தேதி என்னுடைய G-Pay அக்கௌண்ட்டில் பார்த்தபோது, என்னுடைய ஓட்டலுக்குண்டான சர்வீஸ் எண்.08-284-012-176 உரிய மின் கட்டணம் ரூ.37/- என வந்தது, நானும் அதை G-Pay-ல் கட்டிவிட்டேன். பணம் கட்டியது குறித்து நான் யாருக்கும் சொல்லவில்லை. பின்னர், உதவி செயற்பொறியாளர் புனிதா அவர்களிடம் மோனிகா பணம் ரூ.50,000/- கேட்டது பற்றி சொன்னால், அவர் பணம் மேற்கொண்டு செலவாகாமல் கனக்ஷனை மாற்றித்தருவார் என நினைத்து பகல் சுமார் 2.40 மணிக்கு புனிதா அவர்களுக்கு போன் செய்து, அவர்களை நேரில் பார்க்க வேண்டும் என்று சொன்னதற்கு அவர் என்னை ஆபீஸிற்கு வரும்படி சொன்னார். அதன்படி நானும் சாயந்திரம் 4.30 மணிக்கு அவருடைய ஆபீஸிற்கு போனேன். அப்போது அவர் வெளியில் செல்ல அவருடைய டுவீலரில் வெளியில் வந்து கொண்டிருந்ததார். அப்போது அவர் என்னை பார்த்தவுடன் அவருடைய வண்டியை நிறுத்தினார். அவரிடம் நான் மோனிகா என்னிடம் மீண்டும் பணம் ரூ.50,000/- கேட்டது பற்றி சொன்னதும், அவர் உங்க கடைக்கு போங்க, எதுனாலும் உங்க கடைல பேசிக்கலாம், நான் ஐந்து நிமிஷத்துல வருகிறேன் என சொல்லி அனுப்பிவிட்டார். நானும் என்னுடைய ஓட்டலுக்கு போய்விட்டேன். அங்கு 5.40 மணிக்கு ADE புனிதா மற்றும் அவருடன் மோனிகாவும் வந்தார்கள். அப்போது நான் புனிதா அவர்களிடம் என்னுடைய அப்பாவிற்கு ஆஸ்பிடல் செலவு அதிகமாகிவிட்டது, மீண்டும் ஐம்பதாயிரம் பணம் கேட்கிறார்கள் என சொன்னதற்கு, அவர் என்னை பார்த்து, அவர்கள் உரிமையாக கேட்கிறார்கள், கொடுத்துவிடுங்கள் என சொல்லி விட்டு போய்விட்டார்கள். பின்னர், 02-04-2025 தேதி மதியம் 12.15 மணிக்கு மோனிகா அவர்கள் எனக்கு போன் செய்து, எப்போ வர்றீங்க என கேட்டார். அதற்கு நான் என்னுடைய அப்பா ஆஸ்பிடலில் இருக்கிறார், அரக்கோணம் வரும்போது நான் உங்களுக்கு போன் செய்கிறேன் என்று சொன்னேன். மீண்டும், அவர் சாயந்திரம் 3.30 மணிக்கு போன் செய்து என்னங்க சார் வந்துட்டீங்களா என கேட்டார். அதற்கு நான் அப்பாவிற்காக சி.எம்.சி.ல்

இருக்கோம் இப்ப ட்வெண்ட்டி பைவ் கொடுத்திடுறேன் ஒரே ஒரு நாள் டைம் கொடுக்க சொல்லுங்க மிச்சத்த கொடுத்துடுறேன் என்று சொன்னதற்கு அவர் அந்த ட்வெண்ட்டி பைவ்வ எப்போ தர்றீங்க என்று கேட்டார். அதற்கு நான் சி.எம்.சி.க்கு அப்பாவை கூட்டிட்டு வந்திருக்கிறேன், நைட் ஆயிடும்போல இருக்கு என்று சொன்னதற்கு, அவர் நான் மேடம்கிட்ட கேட்டுட்டு சொல்றேன் என்று சொல்லி போனை வைத்துவிட்டார். மீண்டும் சுமார் 6.30 மணிக்கு மோனிகா அவர்களிடம் இருந்து போன் வந்தது, அப்போது அவர் மேடம் பேசுனம்னு சொன்னாங்க என்று சொல்லி போனை ADE புனிதா அவர்களிடம் கொடுத்தார், அப்போது ADE புனிதா அவர்கள் என்னிடம் என்னாச்சுப்பா உன்து என்று கேட்டதற்கு, நான் அப்பாவை சி.எம்.சி.க்கு கூட்டிட்டு வந்தது பற்றியும், இருபத்தைந்தாயிரம் ஒருவர் அனுப்பியுள்ளார், ஆஸ்பிட்டல் முடித்துவிட்டு கிளம்பும்போது சொல்கிறேன், இருபத்தைந்தாயிரம் மட்டும் இப்போது கொடுக்கிறேன், மீதி பணத்தை இரண்டு நாள் டைம் கொடுங்க, கொடுத்துவிடுகிறேன் என்று சொன்னதற்கு, அவர் சரி சரிங்க, இல்லைனா மொத்தமா நான் உங்க சர்வீஸ்ல சேர்த்துவிடுறேன், சீக்கிரம் முடிக்கனும்னு பார்க்கிறேன் இதை, நீங்க இழுத்துட்டே இருக்கீங்க என்றும், லீவு போறதுக்கு முன் இதை முடிச்சுட்டு போலாம்னு இருக்கேன் என்று சொன்னார். அதற்கு நான் சாக்குபோக்கு சொல்லி நேரத்தை வாங்கினேன். பின்னர், அவரிடம் நாளை இருபத்தைந்தாயிரம் பணத்தை கொடுத்துவிடுகிறேன் என்று சொன்னதும், ஓ.கே. ஓ.கே. என்று சொன்னார். பின்னர் நான் யாரிடம் கொடுப்பது என்று கேட்டதற்கு, அதற்கு அவர் அவங்க கால் பண்ணுவாங்க இருங்க என்று சொல்லி போனை மோனிகாவிடம் கொடுத்ததும், மோனிகா அவர்களிடம் நாளைக்கு வந்து போன் பண்ணுறேன் மேடம், நான் உங்களிடம் பணத்தை கொடுக்க சொல்லி இருக்கிறார்கள், கொடுத்துட்டு 2 டேஸ் கழித்து மிச்சத்தை கொடுக்கிறேன் என்று சொன்னதற்கு அவர் சரி சார் என்று சொல்லி போனை வைத்துவிட்டார். மேற்படி ஓட்டல் கனக்ஷன் கமர்ஷியலுக்கு மாறிவிட்டதா, இல்லையா என எனக்கு தெரியவில்லை. ஆனால், பில் மட்டும் வந்துவிட்டது. இவர்கள் கேட்கும் பணம் லஞ்சமாகத்தான் இருக்கும். எனவே எனக்கு யாருக்கும் ரூ.50,000/- ஐ லஞ்சமாக கொடுத்து என்னுடைய ஓட்டலுக்குண்டான கனக்ஷனை கமர்ஷியலாக மாற்றுவதற்கு விருப்பமில்லை. அவர்கள்

லஞ்சமாக பணம் கேட்கும்போதெல்லாம் ஏதாவது சாக்கு சொல்லி பிறகு வருவதாக சொல்லி போன் பேசிவிட்டேன். எனவே, அரக்கோணம் ADE புனிதா மற்றும் கமர்ஷியல் இன்ஸ்பெக்டர் மோனிகா ஆகியோரிடம் நான் இன்று முன்பணமாக ரு.25,000/- ஐ கொடுக்கும்போது அவர்களை பிடித்து அவர்கள் மீது சட்டப்பூர்வமான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய புகார் மனுவுடன் கடந்த 01-04-2025 தேதி மாலை சுமார் 5.40 மணிக்கு ADE புனிதா மற்றும் அவருடன் மோனிகா அவர்களும் என்னுடைய ஓட்டலுக்கு வந்து என்னிடம் பேசிய வீடியோவையும், 02-04-2025 தேதி மாலை சுமார் 3.30 மணிக்கு மோனிகா அவர்கள் என்னிடம் செல்போனில் பேசிய கால் ரெக்கார்டையும், அன்றைய தினம் மாலை சுமார் 6.30 மணிக்கு ADE புனிதா மற்றும் மோனிகா ஆகியோர் பேசிய கால்ரெக்கார்டுகளையும் NeelMax 8 GB NM-25 என்ற பென் டிரைவரில் காப்பி செய்து கொடுக்கிறேன். இப்படிக்கு, Sd/- xxxxxxxxx (G.Saravanan), 03/04/25

Sir,

Received the complaint on 03.04.2025 at 08.45 hrs., after due verification Inspr. Tmt.S.Vijayalakshmi to register a case. Sd/- xxxxxxxx (V.Ganesan) 03/04/2025 Dy.Supdt.of Police, V&AC., Ranipet.

Sir,

Received the complaint on 03.04.2025 at 08.45 hrs., after verifying the antecedents of the accused and credibility of the complainant and the video and audio files shown by the complainant in his mobile phone after due satisfaction and verification, I have registered a case in Ranipet V&AC Cr.No.01/2025 u/s 7 of P.C. Act 1988 as amended in Prevention of Corruption (Amendment) Act 2018 on 03.04.2025 at 09.45 hrs. Sd/- xxxxx (S.Vijayalakshmi) 3.4.2025, Inspector of Police, Vigilance and Anti-Corruption, Ranipet.

The FIR in original along with the complaint, NeelMax 8 GB NM-25 Pen Drive, Certificate u/s 63(4) BSA and Form-91 (Sl.No.I0979018) sent to the Hon'ble CJM and Special Judge, Ranipet and other copies to the Officers concerned.

S.Vijayalakshmi 3/4/25

(S.VIJAYALAKSHMI),
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Ranipet.